உ

திருச்சிற்றம்பலம்

# திருவருட்பாவில் பெரும்பொருட் குவியல்

## மூன்றாம் திருமுறை

## (2) விண்ணப்பக் கலிவெண்பா

(ஓராய்வு)

செந்தமிழ்ச்செல்வர், கல்விக்காவலர்
தர்மரட்சாமணி, இயலிசைமாமணி, வித்துவான்
**டாக்டர் திரு. ம வெ. ஜெயராமன்** எம்.ஏ.,டி.லிட்.,
அவர்களின்

63ஆம் ஜன்ம நக்ஷத்திர வெளியீடு
22-5-1990

**அன்னை அன்னபூரணி பதிப்பகம்**
17, கென்னடி ஸ்கொயர்
பெரம்பூர், சென்னை - 600 011

உ

திருச்சிற்றம்பலம்

அருட்பிரகாச வள்ளலார் அருளிய

# திருவருட்பாவில் பெரும்பொருட் குவியல்

## மூன்றாம் திருமுறை

## (2) விண்ணப்பக் கலிவெண்பா

(ஓராய்வு)

ஆய்வுரையாளர்
பேராசிரியர் கே.எம். வேங்கடராமையா
திருப்பனந்தாள்

அன்னை அன்னபூரணி பதிப்பகம்
17, மூன்றாவது வடக்குவீதி
கென்னடி ஸ்கொயர், பெரம்பூர்
சென்னை - 600 011

கவின்கலை அச்சகம், கந்தசாமிநகர்,
பாலவாக்கம், சென்னை-600 041

உ

## பதிப்புரை

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

— திருவாசகம்

திருவருட்பிரகாச வள்ளலார் எனப்படும் வடலூர் இராமலிங்கர் அருளிய பாடல்கள் "திருவருட்பா" என்று வழங்கி வருவது தமிழுலகு நன்கு அறியும். திருவருட்பா ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளது.

முதல் ஐந்து திருமுறைகள் ஒரு தொகுப்பாகவும் ஆறாம் திருமுறை ஒரு தொகுப்பாகவும் 1972லும், 1981லும் ஆக இரு முறை பதிப்பிக்கப்பெற்றுள்ளன. முதற் பதிப்புச் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தாராலும், இரண்டாம் பதிப்பு இராமலிங்கர் பணிமன்றத்தாராலும் சிறப்புற அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளன.

மேலும் இவ்வாறு திருமுறைகட்கும், சென்னை, இராமலிங்கர் பணி மன்றத்துத் தலைவர், தொழிலதிபர், திரு நா. மகாலிங்கம் பி.எஸ்.சி., எப்.ஐ.இ., அவர்களின் பெரும் பொருட்கொடையால், உரைவேந்தர், சித்தாந்த கலாநிதி, ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் ஒரு பேருரை எழுதினார்கள். அவ்வுரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால் அருமையாக அச்சிடப் பெற்று வெளிவந்துள்ளது. 9 தொகுதிகள் 4614 பாடல்கள் மூலமும் உரையும் இந்நாளில் நமக்குக் கிடைக்கின்றன. இது திருவருட்பா அன்பர்கட்குக் கிடைத்த திரு அருட் கொடையாகும்.

இத்திருவருட்பா ஆழ்ந்தகன்ற பெரிய ஞான நூற்களஞ்சியம். இதன்கண் கண்ட அரிய செய்திகளைக் கட்டுரை வடிவில் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அண்மையில் எனக்குத் தோன்றியது. அதற்கேற்ப மூன்றாம் திருமுறையில் "திருவடிப்

புகழ்ச்சி'' முதலாக ''திருவருள் முறையீடு'' ஈறாக ஆறு நூல்கள் இருத்தலின், அவற்றுள் ஒவ்வொன்று பற்றியும் ஆய்வு எழுத முற்பட்டு, முதலாவதாக ''விண்ணப்பக் கலிவெண்பா'' என்னும் செஞ்சொற் பாமலரைப் பற்றி ஆய்வு எழுதியுள்ளேன். அடுத்துத் திருவருள் முறையீடு விரைவில் வெளிவரும். எல்லாம் வல்ல சிவபரம்பொருள் துணைசெய்க!

இவ் ஆய்வுக் கட்டுரைகட்குப் பொதுத் தலைப்பாகத் ''திருவருட்பாவில் பெரும் பொருட்குவியல்'' என்று அமைத்திருக் கிறேன். அன்பர்கள் ஏற்றருள்வர் என்ற துணிபுடையேன்.

எளியேனிடத்தில் மிக்க அன்பு பூண்டவர்களும், தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் வள்ளன்மை உடையவர்களும், எளியேற் கும் எளியேன் புதல்வர்கட்கும் வேண்டிய வேண்டியாங்கு உதவி கள் புரிந்து வருபவர்களும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி யில் பயின்று வித்துவான் தேர்ச்சி பெற்றவர்களும், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர், கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஆகிய அருளாளர் களுடைய அன்புக்கு உரியவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர் கயிலை மாமுனிவர் நிறுவிப் புரந்தருளும் ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் கல்விக் குழுமத்துத் தலைவரும், பெங்களூர் வெங்கடேசா கல்விக் குழுமத்து நிறுவனர் செயலர் தாளாளரும், பெங்களூரில் M.V.J. பொறியியல் கல்லூரி முதலாகிய பல கல்வி நிறுவனங்களை நிறுவிப் புரந்து கல்வித் தொண்டு சிறக்கப் புரிபவர் களும், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம் அவர்களால் செந்தமிழ்ச் செல்வர் என்ற பட்டம் அருளப் பெற்றவர்களும் கல்விக் காவலர், தர்ம ரட்சாமணி, இயலிசை மாமணி என்ற பட்டங்களைப் பெற்றவர்களும் ஆகிய டாக்டர் திரு ம.வெ. ஜெயராமன் M.A., D.Lit., அவர்களின் 63ஆவது ஜென்ம நக்ஷத்திரத் திருநாள் ஆகிய 22-5-1990இல் இந்நூல் வெளியிடப் பெறுகிறது.

திருவருட்பா அன்பர்கள் இந்நூலைப் பயின்று திருவருட் பாவில் கண்ட அரும் பெரும் பொருள்களை அறிந்து உய்திபெறுக.

திருப்பனந்தாள்
22-5-1990

அன்பன்
**கே.எம். வேங்கடராமையா**

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய

# விண்ணப்பக் கலிவெண்பா

## காப்பு

**அவ்வவ் விடைவந்(து) அகற்றி அருள்தரலால்**
**எவ்வெவ் இடையூறும் எய்தல்இலம்—தெவ்வர்தமைக்**
**கன்றுமத மாமுகமும் கண்மூன்றும் கொண்டிருந்தது**
**ஒன்றுஅது நம்உள்ளம் உறைந்து.**

## தோற்றுவாய்

திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய திருவருட்பா, மூன்றாம் திருமுறையில், இரண்டாவதாகக் காணப்பெறுவது, ''விண்ணப்பக் கலிவெண்பா'' என்னும் நூலாகும். இந்நூலில் 290 ஆம் கண்ணியில் ''நின்றனக்கோர் விண்ணப்பம்'' என்று அருளப் பெற்றுள்ளமையின், ''விண்ணப்பக் கலிவெண்பா'' என்று இந்நூல் பெயர் பெறுவதாயிற்று. இந்நூல் 417 கண்ணிகளை யுடையது. ''சொல்'' என்று தொடங்கி ''மலர்'' என்று இச்சொல் மலர் முடிகிறது.

## நூற்பொருள்

கண்ணி 1 முதல் 64 கண்ணிகளில் சோழ நாட்டுக் காவிரி வடகரைத் தலங்கள் 63 குறிக்கப்பெற்று உள்ளன.

கண்ணி 65 முதல் 191 வரை 127 கண்ணிகளில் சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்கள் 127 குறிக்கப் பெற்று உள்ளன.

192, 193 ஆகிய இரு கண்ணிகளில் ஈழநாட்டுத் தலங்கள் இரண்டும் குறிக்கப்பெற்றன.

194 முதல் 206 வரை 13 கண்ணிகளில் பாண்டிநாட்டுத் தலங்கள் 13 கூறப்பட்டன.

கண்ணி 207இல் மலைநாட்டுத்தலம் கூறப்பெற்றுள்ளது.

208 முதல் 214 வரை 7 கண்ணிகளில் கொங்குநாட்டுத் தலங்கள் ஏழு குறிப்பிடப் பெற்றுள்ளன.

215 முதல் 236 முடிய 22 கண்ணிகளில் நடுநாட்டுத் தலங்கள் 22 கூறப்பெற்றன.

237 முதல் 271 வரை 35 கண்ணிகளில் தொண்டநாட்டுத் தலங்கள் 32 கூறப்பெற்று உள்ளன.

272இல் கூறப்பெற்றது ஒரு துளுநாட்டுத் தலம்.

273 முதல் 279 வரை 7 கண்ணிகளில் வடநாட்டுத் திருத் தலங்கள் சொல்லப்பெற்றன.

280 முதல் 290 வரை இறைவனுடைய சிறப்பியல்புகள் விவரிக்கப் பெற்றுள்ளன.

291 முதல் 3/0 வரை ''உற்றதவத்தோர் நீத்த தீதுகள்'' சொல்லப்பட்டுள்ளன.

371 முதல் 390 வரை இறைவனது அருட்செயல்கள் விளக்கப் பெற்றன.

391 முதல் 394ஆம் கண்ணிவரை வேண்டுகோள்.

394 முதல் 412 வரை ''தன்னிலை கூறல்'' காணப்படுகிறது.

412 முதல் 417 வரை ஆட்கொள்ளுமாறு வேண்டுதல்உள்ளது.

| கண்ணி எண் | காவிரி வடகரைத் தலங்கள் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 1 | தில்லைச் சிற்சபை | தலைமைத் தெய்வம் |
| 2 | திருப்புலியூர் | குணக்குன்றம் |
| 3 | திருவேட்களம் | விழுப்பொருள் |
| 4 | திருநெல்வாயில் | நீளொளி |
| 5 | திருக்கழிப்பாலை | இன்பக்களிப்பு |
| 6 | திருநல்லூர்ப் பெருமணம் | நன்னிலை |
| 7 | திருமயேந்திரப்பள்ளி | இன்ப வாழ்வு |
| 8 | திருமுல்லைவாயில் | மணிவிளக்கு |
| 9 | திருக்கலிக்காமூர் | கரும்பு |
| 10 | திருச்சாய்க்காடு | தடங்கடல் |
| 11 | திருப்பல்லவனீச்சரம் | பாவனம் |
| 12 | திருவெண்காடு | மெய்ப்பொருள் |
| 13 | திருக்காட்டுப்பள்ளி | சிவக்கொழுந்து |

| வரிசை எண் | காவிரி வடகரைத் தலங்கள் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 14 | திருக்கருகாவூர் வெள்ளடை | எங்கோ |
| 15 | திருச்சீர்காழி | ஞானத்திரவியம் |
| 16 | திருக்கோலக்கா | கொடையாளன் |
| 17 | திருப்புள்ளிருக்குவேளூர் | புரிசடையான் |
| 18 | திருக்கண்ணார் கோயில் | — |
| 19 | திருக்கடைமுடி | கருத்தன் |
| 20 | திருநின்றியூர் | நிலைமையன் |
| 21 | திருப்புன்கூர் | சிவன் |
| 22 | திருநீடூர் | நிழல்தரு |
| 23 | திருஅன்னியூர் | அதிபதி |
| 24 | திருவேழ்விக்குடி | வித்தகன் |
| 25 | திருஎதிர்கொள்பாடி | பரம்பொருள் |
| 26 | திருமணஞ்சேரி | மகிழ்வு |
| 27 | திருக்கொறுக்கை வீரட்டம் | நிறைவு |
| 28 | திருக்கருப்பறியலூர் | அரசு |
| 29 | திருக்குரக்குக்கா | இன்பக்கன சுகம் |
| 30 | திருவாழ்கொளிபுத்தூர் | மணிச்சுடர் |
| 31 | திருமண்ணிப்படிக்கரை | மங்கலம் |
| 32 | திருஓமாம்புலியூர் | உத்தமம் |
| 33 | திருக்கானாட்டுமுள்ளூர் | கலைக்கடல் |
| 34 | திருநாரையூர் | நடுநிலை |
| 35 | திருக்கடம்பூர் | என் இரண்டு கண் |
| 36 | திருப்பந்தணநல்லூர் | பசுபதி |
| 37 | திருக்கஞ்சனூர் | என்கண்மணி |
| 38 | திருக்கோடிக்கா | குளிர் மதி |
| 39 | திருமங்கலக்குடி | தேன் |
| 40 | திருப்பனந்தாள் | பாலுகந்த பாகு |
| 41 | திருவாய்ப்பாடி | இன்பவாரிதி |
| 42 | திருச்சேய்ஞலூர் | இன்பச் செழுங்கனி |
| 43 | தேவன்குடி[1] | தெள்ளமுது |
| 44 | திருவியலூர் | சிவானந்தவெற்பு |

1. திருந்துதேவன்குடி.

| கண்ணி எண் | காவிரி வடகரைத் தலங்கள் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 45 | திருக்கொட்டையூர் | கோமளம் |
| 46 | திருஇன்னம்பர் | என் உறவு |
| 47 | திருப்புறம்பியம் | என் உயிர் |
| 48 | திருவிசையமங்கை | என் குரு |
| 49 | திருவைகாவூர் | என்வாழ்முதல் |
| 50 | திருக்குரங்காடு[2] | என் நட்பு |
| 51 | திருப்பழனம் | என் உயிர்க்குஉயிர் |
| 52 | திருஐயாறு | என் ஆதரவு |
| 53 | திருநெய்த்தானம் | நித்தியம் |
| 54 | திருப்பெரும்புலியூர் | கருணைப்பேறு |
| 55 | திருமழபாடி | வச்சிரம் |
| 56 | திருப்பழூவூர் | மரகதம் |
| 57 | திருக்கானூர் | தங்கச்சட்டி |
| 58 | திருஆலந்துறை[3] | முத்து |
| 59 | திருமாந்துறை | மாணிக்கமாமலை |
| 60 | திருப்பாற்றுறை | பரஞ்சுடர் |
| 61 | திரு ஆனைக்கா | அற்புதம் |
| 62 | திருப்பைஞ்ஞீலி | பரம்பரம் |
| 63 | திருப்பாச்சிலாச் சிராமம் | அருள்நிலை |
| 64 | திருஈங்கோய்மலை | இலஞ்சியம் |

குறிப்பு

சைவ சமய சந்தான குரவருள் நான்காமவர் உமாப[illegible]ச்சாரியர் ஆவர். அவர்பாடியருளிய நூல்களுள் ஒன்று திருப்பதிக் கோவை என்பதாகும். இத்திருப்பதிக்கோவையுள் தேவார மூவரும் பாடியருளிய தலங்களின் பெயர்களைக் கூறியுள்ளார். அத்தலங்களின் வரிசையிலே தேவார அடங்கன்முறை (தலமுறை) யில் பதிகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இத்திருப்பதிக்கோவையிலுள்ள வரிசையிலேயே இவ்விண்ணப்பக் கலிவெண்பாவிலும் தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

"அறுபான்மூன்றே வடகரையிற்பதி" என்று திருப்பதிக் கோவையில் காணப்படுகிறது. இவ்விண்ணப்பக் கலிவெண்பாவில்

2. வடகுரங்காடு துறை
3. அன்பில் ஆலந்துறை

64 பதிகள் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது கண்ணியில் ''திருப் புலியூர்க்கோயில்'' என்பது அதிகம். இது பாடல்பெற்ற தலமன்று. திருநீலகண்டர் வழிபட்டதலம். ஆகவே முதலில் 'கோயில்' என்று குறிப்பிட்டது சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலை. அடுத்துத் திருப்புலியூர்க்கோயில் என்றது திருநீலகண்டர் வழி பட்ட திருப்புலீச்சரத்தை. இது இளமையாக்கினார் கோயில் என்று இந்நாளில் வழங்கப்பெறும்.

(6) திருநல்லூர்ப் பெருமணம் என்பது ஞானசம்பந்தர் திருமணநாளில் சோதியிற் கலந்த தலம். அங்குச் சம்பந்தர் பாடிய திருப்பதிகம் ''கல்லூர்ப் பெருமணம்'' என்று தொடங்குவது. இவற்றை நினைப்பிக்கிறது பின்வரும் கண்ணி :

''கல்லூர்ப் பெருமணத்தைக் கட்டுரைக்கச் சோதிதரு
நல்லூர்ப் பெருமணம்''

(38) திருக்கோடிகாவைப் பற்றிய கண்ணியில், ''அஞ்சுகங் கள், நாடிக்காவுள்ளே நமச்சிவாயம் புகலும் கோடிக்கா'' என்று கிளி கள் திருவைந்தெழுத்தை ஓதுகின்றன என்று கூறியது மகிழ்ச்சி தருவதாகும்.

(24) வேழ்விக்குடி என்பது வேள்விக்குடி என்றும், (36) பந்தண நல்லூர் என்பது பந்தணை நல்லூர் என்றும், (38) கோடிக்கா என்பது கோடிகா என்றும், (41) வாய்ப்பாடி என்பது ஆப்பாடி என்றும், (42) சேய்ஞ்ஞலூர் என்பது சேய்ஞலூர் என்றும் (47) புறம்பியம் என்பது புறம்பயம் என்றும் இருத்தல் தகும். மக்கள் வழங்கும் வழக்குப்பற்றி அங்ஙனம் அமைந்தன என்று அமைதி கொள்ளலாம். (41) திருவாய்ப்பாடி என்றும் (47) திருப் புறம்பியம் என்றும் இன்றும் வழக்கிலுள்ளன.

(15) சீர்காழியைப் பற்றிய கண்ணியில் ஞானசம்பந்தரைக் ''கவுணியர்'' என்றும், அவர்க்குத் திருஞானம் அருளியமையும், அடுத்து (16) திருக்கோலக்காவில் ஞானசம்பந்தரைக் ''காழிப் பாலன்'' என்றும், அவர்க்குத் திருத்தாளம் அருளியமையும் கூறப் பெற்றன.

58 ஆம் கண்ணியில் 'நானூறு கோலந்துறை கொண்ட கோவை' என்று மணிவாசகப் பெருமான் பாடியருளிய 'திருக்கோவையார்' குறிக்கப்பெற்றுள்ளது.

| கன்ணி எண் | காவிரித் தென்கரைத் தலங்கள் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 65 | திருவாட்போக்கி | வள்ளல் |
| 66 | கடம்பந்துறை | நிறைவு |
| 67 | பராய்த்துறை | தோன்றல் |
| 68 | கற்குடி | சந்தானகற்பகம் |
| 69 | மூக்கீச்சரம் (உறையூர்) | அணி |
| 70 | சிராப்பள்ளி | ஞானத்தெளிவு |
| 71 | எறும்பியூர் | நன்னெறி |
| 72 | நெடுங்களம் | மெய்த்தாரகம் |
| 73 | காட்டுப்பள்ளி | தேவு |
| 74 | ஆலம்பொழில் | சிவயோகப் பயன் |
| 75 | பூந்துருத்தி | சிவபுண்ணியம் |
| 76 | கண்டியூர் | களைகண் |
| 77 | சோற்றுத்துறை | சுகவளம் |
| 78 | வேதிக்குடி[1] | இன்பவெள்ளம் |
| 79 | தென்குடித்திட்டை | சிவபதம் |
| 80 | புள்ளமங்கை | பரமபோகம் |
| 81 | சக்கரப்பள்ளி | தண்ணளி |
| 82 | கருகாவூர் | இன்பக்கதி |
| 83 | பாலைத்துறை | பரிமளம் |
| 84 | நல்லூர் | நடுநாயகம் |
| 85 | ஆவூர்[2] | ஆண்தகை |
| 86 | சத்திமுற்றம் | சதாசிவம் |
| 87 | பட்டீச்சரம் | பராபரம் |
| 88 | பழையாறை[3] | உள்உவப்பு |
| 89 | ,, வடதளி | தற்பரம் |
| 90 | வலஞ்சுழி | பொன்மலை |
| 91 | கும்பகோணம்[4] | தெய்வக்குலக் கொழுந்து |
| 92 | குடமூக்கில் கீழ்க்கோட்டம் | அன்பர்கேண்மை |
| 93 | குடந்தைக் காரோணம் | கமழ் மலர் |

1. வேதிகுடி. 2. ஆவூர்ப்பசுபதீச்சரம்
3. பழையாறை வடதளிக்கு மட்டும் பதிகம் உண்டு.
4. குடமூக்கு என்று திருப்பதிக் கோவையிலும் தலமுறையாக அமைந்த அடங்கன்முறையிலும் உள்ளது.

| கண்ணி எண் | காவிரித் தென்கரைத் தலங்கள் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 94 | நாகீச்சுரம்[1] | நம்கனிவு |
| 95 | இடைமருது | பூரணம் |
| 96 | தென்குரங்காடுதுறை | செம்மல் |
| 97 | நீலக்குடி | நிட்களம் |
| 98 | வைகல் மாடக்கோயில் | மதுரம் |
| 99 | நல்லம் | இன்பநவவடிவு |
| 100 | திருக் கோழம்பம் | கருணைக் கொண்டல் |
| 101 | ஆவடுதுறை | எம் செல்வம் |
| 102 | திருத்துருத்தி[2] | இன்பச் செழிப்பு |
| 103 | அழுந்தூர் | நிறைதடம் |
| 104 | மாயூரம்[3] | அன்பர் மனோரதம் |
| 105 | விளநகர் | விருந்து |
| 106 | பறியலூர் | மெய்ப்பரம் |
| 107 | திருச்செம்பொன்பள்ளி | ஞானபோதம் |
| 108 | நன்னிப்பள்ளி[4] | பரசிவம் |
| 109 | வலம்புரம் | மேதகவு |
| 110 | திருத்தலைச்சங்காடு | சயம்பு |
| 111 | ஆக்கூர் | விளக்கம் |
| 112 | திருக் கடையூர்[5] | ஆனந்தத் தேறல் |
| 113 | திருக் கடவூர்வீரட்டம் | நாயகன் |
| 114 | வேட்டக்குடி | மேலவன் |
| 115 | தெளிச்சேரி | அங்கணன் |
| 116 | திருத் தருமபுரம் | செய்தவம் |
| 117 | நள்ளாறு | என் நற்றுணை |
| 118 | திருக் கோட்டாறு | குளிர்துறை |
| 119 | அம்பர்[6] | ஞானத்திரட்டு |
| 120 | (அம்பர்) மாகாளம் | அன்பர் மனோலயம் |
| 121 | மீயச்சூர் | தண்ணென்னும் வெண்ணெருப்பு |
| 122 | (மீயச்சூர்) இளங்கோயில் | ஞான இனிப்பு |

1. நாகேச்சரம். 2. குத்தாலம்.
3. மயிலாடுதுறை; மாயூரம் என்றே திருப்பதிக் கோவையிலுளது. 4. நனிபள்ளி
5. திருக்கடவூர் மயானம் என்றதலம்
6. அம்பர்ப் பெருந்திருக்கோயில்

| கண்ணி எண் | காவிரித் தென்கரைத் தலங்கள் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 123 | திருத்திலதைப்பதி | நிதி |
| 124 | திருப் பாம்புரம் | உண்மைப் பரம்பொருள் |
| 125 | திருச் சிறுகுடி | ஆன்மார்த்தம் |
| 126 | திரு வீழிமிழலை | வீராட்டுரு |
| 127 | ,, வன்னியூர் | மணிகண்டன் |
| 128 | திருக்கருவிலி[1] | முக்கண்ணன் |
| 129 | திருப்பேணுபெருந்துறை | பெம்மான் |
| 130 | திரு நறையூர்[2] | நம்பன் |
| 131 | ,, அரிசிற்கரைப்புத்தூர் | — |
| 132 | திருச் சிவபுரம் | எம்மான் |
| 133 | திருக் கலயநல்லூர் | சின்மயன் |
| 134 | ,, கருக்குடி | சங்கரன் |
| 135 | திரு வாஞ்சியம் | மறையோன் |
| 136 | ,, நன்னிலம்[3] | ஞானநாடகன் |
| 137 | திருக் கொண்டீச்சரம் | கோமான் |
| 138 | திருப் பனையூர் | சடாதரன் |
| 139 | திரு விற்குடி | வீரட்டமேயவன் |
| 140 | திருப் புகலூர் | மகாதேவன் |
| 141 | ,, வர்த்தமாநேச்சரம் | வாய்ந்தவன் |
| 142 | திரு இராமனதீசம் | நிராமயன் |
| 143 | திருப் பயற்றூர் | திசையம்பரன் |
| 144 | திருச் செங்காட்டங்குடி | சந்த்ரசேகரன்[4] |
| 145 | திரு மருகல் | மாணிக்கவண்ணன் |
| 146 | திருச்சாத்தமங்கை | கங்கைச் சடாமுடியோன் |
| 147 | திரு நாகைக்காரோணம் | நயந்தோன் |
| 148 | திருச் சிக்கல் | திறலோன் |
| 149 | திருக் கீழ்வேளூர் | செங்கண்விடையோன் |
| 150 | திருத் தேவூர் | தேவ தேவன் |
| 151 | திருப் பள்ளியின் முக்கூடல் | முன்னவன் |
| 152 | திரு ஆரூர் | அருமருந்து |
| 153 | ,, ஆரூரரநெறி | வேளாண்மை |

1. கருவிலிக்கொட்டிட்டை; கருவிலியென்றே திருப்பதிக் கோவையில் உள்ளது
2. நறையூர்ச்சித்தீச்சரம். 3. நன்னிலத்துப் பெருங்கோயில்.
4. கண்ணி 239க்குரிய அடிக்குறிப்பைக் காண்க.

| கண்ணி எண் | காவிரித் தென்கரைத் தலங்கள் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 154 | திரு ஆரூர்ப் பரவையுண் மண்டளி | எம்உடைமை |
| 155 | ,, விளமர் | எம்விருப்பு |
| 156 | திருக் கரவீரம் | சிறப்பு |
| 157 | திருப் பெருவேளூர் | இன்பப் பெருக்கு |
| 158 | திருத் தலையாலங்காடு | தகவு |
| 159 | திருக் குடவாயில் | அன்பர் குறிப்பு |
| 160 | திருச் சேறை | சிற்பரம் |
| 161 | திரு நாலூர்[1] | அன்பர்பெறு நன்னயம் |
| 162 | திருக்கடுவாய்க்கரை[2] | வண்மை |
| 163 | திரு இரும்பூளை | — |
| 164 | ,, அரதைப் பெரும்பாழி | — |
| 165 | ,, அவளிவணல்லூர் | — |
| 166 | திருப் பரிதி நியமம் | — |
| 167 | ,, பூவனூர் | புகழுடையான் |
| 168 | ,, பாதாளேச்சரம் | — |
| 169 | திருக்களர் | மறைமுடிபு |
| 170 | திருச்சிற்றேமம் | செழுங்கதிர் |
| 171 | திரு உசாத்தானம் | தனிமுதல் |
| 172 | ,, இடும்பாவனம் | மாட்சிமை |
| 173 | திருக் கடிக்குளம் | அன்பர் களிப்பு |
| 174 | திருத் தண்டலை நீணெறி | சிந்தாமணி |
| 175 | திருக் கோட்டூர் | தேவ சிகாமணி |
| 176 | திரு வெண்டுறை | மாசிலாமணி |
| 177 | திருக் கொள்ளம் பூதூர் | வான்குலமணி |
| 178 | திருப் பேரெயில் | ஒப்பிலாமணி |
| 179 | திருக் கொள்ளிக்காடு | என் கண்காட்சி |
| 180 | திருத் தேங்கூர்[3] | தேவ சிங்கம் |
| 181 | திரு நெல்லிக்கா | மெய்ந் நியமம் |
| 182 | ,, நாட்டியத்தான்குடி | நல்லினம் |
| 183 | திருக் காறாயில் | மேலோர் கடைப்பிடி |

1. திருநாலூர் மயானம்.
2. திருக்கடுவாய்க் கரைப்புத்தூர்
3. தெங்கூர் என்றே திருப்பதிக் கோவையிலும் அடங்கன் முறையிலும் உளது.

| கண்ணி எண் | காவிரித் தென்கரைத் தலங்கள் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 184 | திருக்கன்றாப்பூர் | பஞ்சாக்கரப்பொருள் |
| 185 | திரு வலிவலம் | சொன் முடிபு |
| 186 | திருக் கைச்சினம் | கரையாக் கற்கண்டு |
| 187 | ,, கோளிலி | அன்பர்குலங் கொள் உவப்பு |
| 188 | திரு வாய்மூர் | மறைக் கொழுந்து |
| 189 | ,, மறைக்காடு | எய்ப்பில் வைப்பு |
| 190 | அகத்தியான்பள்ளி | செம்பொன் |
| 191 | திருக் கோடிக்குழகர் | அருட்கோலம் |

## குறிப்பு

திருப்பதிக் கோவையில் ''தென்கரையில் எண்டரு நூற்றிருபத் தேழ்'' என்றமைக் கேற்ப 65 ஆம் கண்ணிமுதல் 191 வரை 127 கண்ணிகளில் 127 தலங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

எனினும் கண்ணி 88 இல் பழையாறை என்ற தலமும், கண்ணி 89 இல் பழையாறை வடதளி என்ற தலமும் இக்கலிவெண்பாவில் இருக்கின்றன.

ஆனால் திருப்பதிக்கோவையில் ''ஆறை வடதளி'' என்று ஒரு தலம் மட்டும் குறிக்கப் பட்டுள்ளது. அடங்கன் முறையிலேயும் ''திருப் பழையாறை வடதளி'' என்ற தலம் மட்டும் ஒரு பதிகத் துடன் உள்ளது.

எனவே இக்கலிவெண்பாவில் ஒருதலம் அதிகமாகவுள்ளது.

எனினும் கண்ணி 166 பரிதிநியமத்தை அடுத்து ''வெண்ணி'' என்று ஒருதலம் திருப்பதிக்கோவை செய்யுள் 8 இல் காணப் படுகிறது. அடங்கன் முறையிலும் ''வெண்ணியூர்'' என்று ஒரு தலத்துக்கு மூன்று பதிகங்கள் காணப்படுகின்றன.

ஆனால் இக்கலிவெண்பாவில் ''வெண்ணி'' என்ற தலம் குறிக்கப்படவில்லை.

எனவே கூட்டிக்கழித்துப் பார்க்குமிடத்துத் தென்கரைத்தலம் 127 ஆகிறது.

வெண்ணியூர் என்ற தலம் இக்கலி வெண்பாவில் விடுபட்ட மைக்குரிய காரணம் புலப்பட்டிலது.

(84) திருநல்லூர் பற்றிய கண்ணியில் அப்பருக்கு இறைவன் திருவடி சூட்டிய வரலாறு,

—''சீலத்தர்
சொல்லூர் அடிஅப்பர் தூயமுடி மேல்வைத்த
நல்லூர் அமர்ந்த நடு நாயகமே''

என்று கூறப்பட்டுள்ளது.

(95) திருவிடை மருதூர் பற்றிய கண்ணியில் வரகுண பாண்டியனுக்கு நேர்ந்த பிரமகத்திதோஷம் நீங்கிய செய்தி,

''ஓகையுளம்
தேக்கும் வரகுணனாம் தென்னவன்கண் சூழ்பழியைப்
போக்கும் இடைமருதிற் பூரணனே''

என்று கூறியமை காணப் பெறும்.

(126) திருவீழி மிழலைபற்றிய கண்ணியில் திருநாவுக்கரசருக்கும் திருஞான சம்பந்தருக்கும் திருவீழிமிழலையில் நாடோறும் படிக்கா சருளிய அற்புதம்,

''முன்னரசும்
காழி மிழலையரும் கண்டுதொழக் காசளித்த
வீழி மிழலை விராட்டுருவே''

என்று குறிக்கப்பட்டுளது.

(145) திருமருகல் பற்றிய கண்ணியில் அராத்தீண்டிய வணிகனைச் சம்பந்தர் திருமருகலில் உயிர்ப்பித்தருளியமை,

''ஏச்சகல
விண்மருவி னோனை விடம்நீங்க நல்அருள்செய்
வண்மருகல் மாணிக்க வண்ணனே''

என்று சொல்லப்பட்டுள்ளது.

(187) திருக்கோளிலி பற்றிய கண்ணியில், சுந்தரர்தாம் அருளப்பெற்ற நெல்லைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ''ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப்பணியே'' என்று வேண்ட இறைவன் ஆட்களை ஏவிய அற்புதம்,

''நெற்சுமக்க
ஆளிலைஎன்று ஆரூர னார்துதிக்கத் தந்தருளும்
கோளிலியின் அன்பர் குலம் கொள்ளுவப்பே''

என்று குறிக்கப்பட்டுள்ளது.

(189) திருமறைக்காடு பற்றிய கண்ணியில், எலியொன்று தீபத்தைத் தூண்டிய தொண்டின்பயனாக மகாபலிச்சக்கரவர்த்தி ஆயின செய்தி,

''—நேயமுணத்
தேடுஎலியை மூவுலகும் தேர்ந்து தொழச் செய்தருளும்
ஈடில்மறைக் காட்டிலென்றன் எய்ப்பில்வைப்பே''
என்று உள்ளமை காணலாம்.

99 ஆம்கண்ணியில் ''பாடச்சீர் வல்ல தமிழ்ப் புலவர்'' என்றும், கண்ணி 123 இல் ''வளங்கோவை நாடும் திலத நயப்புலவர்'' என்றும் புலமை சான்றவர்கள் புகழ்ந்தோதப் பெற்றுள்ளனர்.

| கண்ணி எண் | ஈழநாட்டுத் தலங்கள் | இறைவனைக்குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 192 | திருக்கோணமலை | — |
| 193 | திருக்கேதீச்சரம் | — |

''ஈழத்தில் இசை கோணமாமலை கேதீச்சரம் என்றிரண்டே'' என்று திருப்பதிக் கோவையிலும் ஈழநாட்டுப்பதிகள் இரண்டு என்றே கூறப்பட்டுள்ளது.

| கண்ணி எண் | பாண்டிநாட்டுத் தலங்கள் | இறைவனைக்குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 194 | மதுரை ஆலவாய்[1] | சொக்கழகானந்தம் |
| 195 | ஆப்பனூர் | சதானந்தம் |
| 196 | பரங்குன்று | இன்பானந்தம் |
| 197 | ஏடகம் | அறிவானந்தம் |
| 198 | கொடுங்குன்றம் | எம்ஊதியம் |
| 199 | புத்தூர் | அடியார் பூரிப்பு |
| 200 | ராமீசம் | சிவரத்தினம் |
| 201 | ஆடானை | கருணாகரம் |
| 202 | கானப்பேர் | ஆனந்தக் காளை |
| 203 | பூவணம் | ஆனந்தப் பொக்கிஷம் |
| 204 | சுழியல் | சிவசாக்ஷி |
| 205 | குற்றாலம் | அன்பர்குதுகலிப்பு |
| 206 | நெல்வேலி | உண்மை நிலையம் |

குறிப்பு

பாண்டி நாட்டுத்தலங்கள் பதினான்காகும். இங்குப் பதின் மூன்றே ஓதப்பட்டுள்ளன. திருப்புனவாயில் இங்கு இடம் பெற

1. ஆலவாய் என்றே திருப்பதிக் கோவையிலும் அடங்கன் முறையிலும் உள்ளது.

வில்லை. பாண்டி பதினான்கு திருப்பதிக்கோவையில் பின்வருமாறு கூறப்பெற்றுள்ளன :

''ஆலவாய் ஆப்பனூர் பரங்குன்று ஏடகத்தோடு
அருங்கொடுங்குன்றம் திருப்பத்தூர் புனவாயிலினோடு
ஏலுமிரா மேச்சரம் ஆடானை கானப்பேர்
எழில்திருப் பூவணம் சுழியல் இன்புறு குற்றாலம்
பாலலோசன திருநெல் வேலியொடு பாண்டி
பதினான்கு......

ஸ்ரீ குமர குருபர சுவாமிகளும், பாண்டி பதினான்கையும் மதுரை மீனாட்சியம்மை குறம் என்ற நூலில் 21 ஆம் பாடலில் பின்வருமாறு கூறியுள்வார் :-

''கூடல்புன வாயில் கொடுங் குன்றுபரங் குன்று
குற்றாலம் ஆப்பனூர் பூவணம்நெல் வேலி
ஏடகம் ஆடானைதிருக் கானப்பேர் சுழியல்
இராமேசம் திருப்புத்தூர் இவைமுதலாம் தலங்கள்''

''கூடல்புனவாயில்'' என்ற ஒரு வெண்பாவிலும் பாண்டி பதினாலு தலங்கள் கூறப்பெற்றுள்ளன.

இங்ஙனம் பதினான்கு என்று கூறியிருக்க, விண்ணப்பக் கலி வெண்பாவில் திருப்புனவாயில் என்ற தலம் விடுபட்டமைக்குக் காரணம் புலப்பட்டிலது.

''மலைநாட்டில் அஞ்சைக்களம் ஒன்றே'' என்பது திருப்பதிக் கோவை. அங்ஙனமே இவ் விண்ணப்பக் கலிவெண்பாவில் திருவஞ்சைக்களம்.

''வல்வேல்
நஞ்சைக் களம்வைத்த நாதவெனத் தொண்டர்தொழ
அஞ்சைக் களம்சேர் அருவுருவே''

என்று 207 ஆம் கண்ணியில் குறிக்கப்பட்டது.

| கண்ணி எண் | கொங்குநாட்டுத்தலம் | இறைவனைக்குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 208 | திருப்புக்கொளியூர் அவிநாசி | சுயம்பு |
| 209 | முருகன் பூண்டி | இருநிதி |
| 210 | கொடிமாடச் செங்குன்றூர் | சஞ்சீவி |
| 211 | வெஞ்சமாக்கூடல் | விரிசுடர் |
| 212 | பவானிகூடல் எனும் நணா | இன்னிசை |
| 213 | பாண்டிக் கொடுமுடி | பண்மயம் |
| 214 | கருவூர் | செய்யுள் நவாசம் |

திருப்பதிக் கோவையில் கூறப்பட்ட வரிசை பின் வருமாறு:

''சீலமிகும் அவிநாசி திருமுருகன் பூண்டி
திருநணா கொடிமாடச் செங்குன்றூர் தானே''

''வெஞ்சமாக் கூடல்கொடு முடிகருவூர் கொங்கின்
மேவும் ஏழ்''

விண்ணப்பக் கலிவெண்பாவில் முறை சிறிது மாறுபட்டுள்ளது.

| கண்ணி எண் | நடு நாட்டுத்தலம் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 215 | அரத்துறை[1] | தாணு |
| 216 | கடந்தைத் தூங்கானை மாடம் | சுடர்க்கொழுந்து |
| 217 | கூடலை யாற்றூர் | குணநிதி |
| 218 | எருக்கத்தம் புலியூர் | வேதசமரசம் |
| 219 | திணையூர் | உமாபதி |
| 220 | சோபுரம் | ஞானதீவகம் |
| 221 | அதிகைவீரட்டம் | மாதவம் |
| 222 | நாவலூர் | ஞானியருள் ஞாபகம் |
| 223 | முதுகுன்றம் | அருட்கொள்கை |
| 224 | நெல்வெண்ணெய் | சிவநிட்டை |
| 225 | கோவலூர் வீரட்டம் | பரிசு |
| 226 | அறையணி நல்லூர் | உயர்வு |
| 227 | இடையாறு | நல்இயல்பு |
| 228 | வெண்ணெய்நல்லூர் அருட்டுறை | நற்பயன் |
| 229 | துறையூர் | பிறைசூடி |
| 230 | வடுகூர் | சுயஞ்சுடர் |
| 231 | மாணிக்குழி[2] | மகத்துவம் |
| 232 | பாதிரிப்புலியூர் | ஏந்தல் |
| 233 | முண்டீச்சரம் | முழுமுதல் |
| 234 | பனங்காட்டூர் | நிக்ஷேபம் |
| 235 | ஆமாத்தூர் | மெய் அருட்பிழம்பு |
| 236 | அண்ணாமலை | அருட்சுடர் |

1. திருநெல்வாயில் அரத்துறை. 2. மாணிகுழி

குறிப்பு

நடுநாடாவது தொண்டை நாட்டுத் தெற்கு எல்லையாகிய தென் பெண்ணையாற்றுக்கும், சோழநாட்டின் வடவெல்லை யாகிய வெள்ளாற்றுக்கும் இடைப்பட்டது.

(221) திருவதிகை பற்றிய கண்ணியில் மருணீக்கியார் (ஆகிய அப்பரது) தமக்கையார் திலகவதியார் இறைவனைத்துதி செய் திருந்தமையும், திருவதிகை கெடிலநதிக்கரையிலுள்ளது என்ற செய்தியும்,

> ''—வார்கெடிலச்
> சென்னதிகை ஓங்கித் திலதவதி யாரபரவும்
> மன் அதிகை வீரட்ட மாதவமே''

என்று குறிக்கப் பெற்று உள்ளன.

(222) திருநாவலூர் பற்றிய கண்ணியில் திருநாவலூர் சுந்தரர் அவதாரஞ் செய்த ஊர் என்பது,

> ''பன்னரிதாம் ஆவல் ஊர் எங்களுடை
> ஆரூரனார் ஊர் ஆம் நாவலூர்''

என்று குறிக்கப்பட்டுள்ளது.

(228) திருவெண்ணெய் நல்லூர் பற்றிய கண்ணியில், அருட்டுறை என்ற அவ்வூர்த் திருக்கோயிலின் பெயரும், அவ்வூரில் சுந்தரர் தடுத்தாட்கொள்ளப் பெற்ற செய்தியும்,

> ''சொல்ஊரன் தன்னைத் தொழும்புகொளும் சீர்வெண்ணெய்
> நல்லூர் அருட்டுறையில் நற்பயனே''

என்று கூறப்பட்டுள்ளன.

(216) 'சுடர்க்கொழுந்து' என்பது திருத் தூங்கானைமாடத்துக் கோயில் கொண்டருளிய இறைவன் திருநாமமாகும்.

| கண்ணி எண் | தொண்டநாட்டுத்தலம் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 237 | காஞ்சி திருஏகம்பம் | பேரின்பம் |
| 238 | கச்சி மேற்றளி | ஆனந்த வீட்டுறவு |
| 239 | ஓணகாந்தன் தளி | அருட்ப்ரகாசம்[1] |

1. பிரகாசம் எனவரற் பாலது 'ப்ரகாசம்'' என்று உள்ளது; இங்ஙனமே கண்ணி 144இல் ''சந்திர'' எனவரற்பாலது ''சந்த்ர'' என உள்ளது, யாப்பமைதி நோக்கி.

| கண்ணி எண் | தொண்டநாட்டுத்தலம் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 240 | அனேகதங்காபதம் | தயாநிதி |
| 241 | கச்சிநெறிக் காரைக்காடு | இறை |
| 242 | குரங்கணின் முட்டம் | இயன்மொழி |
| 243 | மாகறல் | அன்பர் அபிமானம் |
| 244 | ஒத்தூர் | வேதாந்த உண்மை |
| 245 | வன்பார்த்தான் பனங்காட்டூர் | பாக்கியம் |
| 246 | வல்லம் | அன்பர் வசித்துவம் |
| 247 | மாற்பேறு | அன்பர் மனோபலம் |
| 248 | ஊறல் | அழியா உவகை |
| 249 | இலம்பயங்கோட்டூர் | நலம் |
| 250 | விற்கோலம் | பரமேட்டிமை |
| 251 | ஆலங்காடு | அருள்மயம் |
| 252 | பாசூர் | உண்மைப் பரத்துவம் |
| 253 | வெண்பாக்கம் | அன்பர் பெறும் வீறாப்பு |
| 254 | கள்ளில் | நம்கடப்பாடு |
| 255 | காளத்தி | ஞானக்களஞ்சியம் |
| 256 | ஒற்றியூர் | என் உள் அன்பு |
| 257 | ,, | சிவபோக சாரம் |
| 258 | ,, | அமுத சாரம் |
| 259 | ,, | வேத சாரம் |
| 260 | வலிதாயம் | ஞானஇலக்கணம் |
| 261 | முல்லைவாயில் | முத்திவித்து |
| 262 | வேற்காடு | வேதநுட்பம் |
| 263 | மயிலை | வேத கீதம் |
| 264 | வான்மியூர் | ஞானவிதரணம் |
| 265 | கச்சூர் ஆலக்கோயில் | கனதூய நேயம் |
| 266 | இடைச்சுரம் | சிவானந்த வண்ணம் |
| 267 | கழுக்குன்று | அறிவானந்த மூர்த்தம் |
| 268 | அச்சிறுபாக்கம் | ஞான சம்மதம் |
| 269 | வக்கரை | உபநிடத நிச்சயம் |
| 270 | அரசிலி | உத்தமமெய்ஞ்ஞான ஒழுக்கம் |
| 271 | இரும்பை மாகாளம் | சிவயோக நாட்டம் |

## குறிப்பு

'தொண்டை நன்னாட்டு எண்ணின் முப்பானிரண்டே'' என்று உமாபதிசிவம் பகர்வதற்கேற்ப அமைந்திருப்பினும், திருவொற்றியூர்க்கு நான்கு கண்ணிகள் காணப்படுகின்றன.

வள்ளலார் இருபத்து மூன்றாண்டுக் காலம் நாடோறும் திருவொற்றியூர்க்குச் சென்று தியாகப் பெருமானையும் வடிவுடையம்மையையும் வழிபட்டமையின் திருவொற்றியூர்க்கு நான்கு கண்ணிகள் அமைந்தன. திருவொற்றியூர் இறைவனை விளிக்கும் விளிகளுள் ஒன்று ''**சிவபோக சாரம்**'' என்பதாம். இத்தொடர் தருமபுர ஆதீனத்து முதற்குரவராகிய குருஞான சம்பந்தர் அருளிய நூல்களுள் ஒன்றாகிய **சிவபோக சாரம்** எனும் நூலை நினைவு படுத்தும்.

தொண்டை நாட்டுத் தலங்களைப் பற்றிக் கூறத் தொடங்கிய கண்ணியில் (237) ''**தொண்ட நாட்டிலுயர்காஞ்சி**'' என்ற விடத்துத் தொண்டை நாட்டைத் **தொண்டநாடு** என்று குறித்தருளினார்.

''திரு அருட்பா முதல் ஐந்து திருமுறைகள்'' இரண்டாம் பதிப்பு, ''இராமலிங்க அடிகள் வரலாற்றுச்சுருக்கம்'' என்ற பகுதியில்,

''அக்காலத்தில் **தொண்டை மண்டலம்** என்ற பெயரைக் குறித்துச் சென்னைப் புலவர்களிடையே ஒரு வாதம் எழுந்தது. ''தொண்டை மண்டலம்'' என்று வழங்குவது முறையா? அல்லது ''**தொண்ட மண்டலம்**'' என்று வழங்குவது முறையா? என்பதே அவ்வாதம். இவ்வாதம் முடிவுறாது இறுதியில் அடிகளிடம் வந்தது. அடிகள் தொண்ட மண்டலம் என்பதே முறையென நிறுவினார்கள்'' என்றுகாணப்படுகிறது. இதனால் தொண்டநாடு, தொண்டமண்டலம் என்று கூறுவதே வள்ளலாரின் கோட்பாடு என்பது தெரியவரும்.

கண்ணி 247இல் ''**சொல்லரிக்குக் காற்பேறு கச்சியில் முக்காற்பேறு இவண் என்னும் மாற்பேறு**'' என்று ஒரு பழமொழி போன்று கூறப்பட்டுள்ளது. கச்சியில் உலகளந்த பெருமாளை நினைவிற் கொண்டு 'காற்பேறு' என்றார்: சக்கரம் பெற்றமையால் எஞ்சியது முக்கால் பேறு எனப்பட்டது.

கண்ணி 251இல் பழையனூர் ஆலங்காடு பற்றிக் கூறியவர் ''நீலி'' என்பாளது கதையைக் குறிப்பிட்டருளினார்.

—2—

திருவெண்பாக்கம் பற்றிய (253) கண்ணியில், சுந்தரர்க்கு இறைவன் ஊன்றுகோல் அருளியமையை,

—தேசு ஊரன்

**கண்பார்க்க வேண்டுமெனக் கண்டூன்று கோல் கொடுத்த**
**வெண்பாக் கத்து அன்பர் பெறும் வீறாப்பே''**

என்று பாடியருளினார்.

''கோகரணம் துளுவதேயத்தில் ஒன்றே'' என்ற திருப்பதிக் கோவைக்கேற்ப 272 ஆம் கண்ணி திருக்கோ கரணத்துக்கு உரியது.

| கண்ணி எண் | வடநாட்டுத்தலம் | இறைவனைக் குறிக்கும் சொற்றொடர் |
|---|---|---|
| 273 | திருப்பருப்பதம்[1] | ஒப்புரவு |
| 274 | நீலப்பருப்பதம்[2] | தெய்வத் திலகம் |
| 275 | அனேக தங்காவதம் | நயப்புணர்வு |
| 276 | கேதாரம் | பண்ணிறைந்த கீதப் பனுவல் |
| 277 | நொடித்தான் மலை | அமுதச் செழுஞ்சுவை |
| 278 | வெள்ளிமலை | — |
| 279 | கயிலைமலை | — |

குறிப்பு

''வடக்கிற் பதியைந்தே'' என்பது திருப்பதிக்கோவை. இங்கு வெள்ளிமலை, கயிலைமலை என்று இரண்டு அதிகம்.

இதுவரையிலும் கண்டவாற்றான் தேவார மூவராலும் பாடப் பெற்ற எல்லாத் தலங்களுக்கும் (பெரும்பாலும்) தலமொன்றுக்கு ஒரு கண்ணி வீதம் பாடப் பெற்றுள்ளமை தெரிய வருகிறது.

இங்ஙனம் தலங்களைப் பாடியது ஏன் என்ற வினா எழக்கூடும்.

மூவர் முதலிகளில் திருஞானசம்பந்தர், ''ஆரூர் தில்லையம்பலம்'' என்று தொடங்கிய பதிகத்தையும், திருநாவுக்கரசர், ''தில்லைச் சிற்றம்பலமும்'' என்று தொடங்கிய பதிகத்தையும், சுந்தரர், ''காட்டூர்க் கடலே'' என்ற பதிகத்தையும் க்ஷேத்திரக் கோவை—ஊர்த் தொகையாகப் பாடியுள்ளனர்.

---

1. ஸ்ரீசைலம்.
2. இந்திர நீலப்பருப்பதம் என்று அடங்கன் முறையில் உள்ளது.

அகத்தியர் தேவாரத் திரட்டில் இம்மூன்று பதிகங்களும் இடம் பெற்றுள்ளன.

''ஆரூர் தில்லை காட்டூர் மூன்றும்
சீரார் கோயில் திறமையதாகும்''

என்று அகத்தியர் தேவாரத் திரட்டுக்குரிய கருத்துரைக்கும் பாடலில் கூறப்பட்டுள்ளது.

இப்பதிகங்களுள் சிவத்தலங்களின் பெயர்கள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட மூன்று திருப்பதிகங்களேயன்றித் திருநாவுக்கரசர் ''அடைவு திருத்தாண்டகம்'' ''காப்புத் திருத்தாண்டகம்'' என்று மேலும் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார்.

இத்திருப் பதிகங்களில் இத்தலங்களின் பெயர்களை மட்டும் கூறுவதான் ஆய பலன்களும் கூறப் பெற்றுள்ளன.

''பிதற்றாய் பிறை சூடி தன் பேரிடமே'' என்ற சம்பந்தர், இவ்வாறு கூறுதலினாலாய பயன் ஆக,

''இடும்பைக் கடல் நீந்தலாம்;

''அரும் பாவங்களாயின தேய்ந்தறும்;

''தவம் ஆம்; மலமாயின தானறும்''

—என்று அருளியுள்ளார்.

திருநாவுக்கரசர் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில், எல்லாத் தலங்களிலும் ''கயிலாய நாதனையே காணலாமே'' என்று கூறியருளி, அடைவு திருத்தாண்டகத்தில்,

''ஏத்துவோம் இடர்கெட நின்றேத்துவோமே;

''இறைவனுறை சுரம்பலவும் இயம்புவோமே;

''குளம்களம் கா அனைத்தும் கூறுவோமே;

''துறையனைத்தும் வணங்குவோமே;

—என்று அருளிச் செய்தமையோடு,

''பகர்வோ ரெல்லாம் பரலோகத் தினிதாகப் பாலிப்பாரே;

''நமன்தமரும் சிவன்தமர் என்று அகல்வர் நன்றே;

''போற்ற இடர் போகும் அன்றே;

தொழ இடர்கள் தொடரா வன்றே;

"தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே;

—என்று பயன்களையும் அருளிச் செய்தார்.

இத்தகைய பெரு நோக்குடன், பெரும் பயன் பெறற் பொருட்டே, ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பதாகிய தலங்களைப் பற்றி நிரலே வள்ளல் பெருமான் இக்கலி வெண்பாவில் வழங்கியருளினார் என்று அறிந்து உய்வோமாக.

**இறைவனின் சிறப்பியல்புகள்**

280 முதல் 290 வரையுள்ள கண்ணிகளில் இறைவனைப் பற்றிய சிறப்புச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவை பின் வருமாறு :

குமரன் தந்தை;
என் அருமைத் தந்தை, தாய்;
சிந்தையே கோயில் கொண்ட தீர்த்தன்;
எண்டோளுடையான்;
கொன்றை மாலையன்;
தொண்டர் காண்டற்கு எளியன்;
உருத்திரன் மால் ஆதியர்க்கு அரியன்;
பொன் போன்ற மேனிப் புராதனன்;
செஞ்சடையன்;
எல்லோர்க்கும் நல்லவன்;
எல்லாம் செய வல்லவன்;

தொல்லூழியில் எல்லாம் அடி நீழலில் ஒடுங்க மாநடனம் செய்வோன்;

தேவர்களுக்கெல்லாம் மூன்னவன்;
ஐந்து தேவர்களாய்[1] ஐந்தொழிலும்[2] செய்வோன்;

மண் முதலாம் ஐந்தாய் இரு சுடராய் ஆன்மாவாய் (—அட்ட மூர்த்தியாக) விளங்குபவன்;

நாதமுடன் விந்துவாகி விரிந்தோன்;
வெண்ணீறு சண்ணித்த மேனியன்;
ஆறுடைய நீள் முடியன்

---

1. ஐந்து தேவர்கள் : பிரமன்; மால்; உருத்திரன்; மகேசன்; சதாசிவன்.
2. ஐந்தொழில்கள் : படைத்தல்; காத்தல்; அழித்தல்; மறைத்தல்; அருளல்.

**உற்ற தவத்தோர் நீத்த தீதுகள்**

291 முதல் 370 வரையுள்ள கண்ணிகளில் தவஞ்செய்தவர்கள் நீத்த தீமைகள் பலவும் கூறப்பட்டுள்ளன. அக்குறைகள் தம் மாட்டு இருப்பனவாகக் கூறுதல் சிந்தித்தற்குரியன. வள்ளலார் குற்றமற்றவர்; மன்பதைகளோ குற்றமே கொள்கலன் ஆக உடையவை. எனினும் அக்குற்றங்களைத் தம்மேல் ஏறட்டுக் கொண்டு கூறுகிறார். உற்ற தவத்தோர் நீத்த தீதுகள் ஆவன:—

வன்சொல் உடைமை; இன்சொலின்மை;
அன்பர்க்கு ஈதலின்மை;
மெய்யுரைக்க விழையாமை;
கொல்லாவிரதம் கொள்ளாமை;
இறைவன் புகழைக் கேட்க விரும்பாமை;
மற்றையோர் புகழைக் கேட்க விரும்புதல்;
பெண் ஏவல் புரிதல்;
இறையடிக்குத் தொண்டு புரியாமை;
முக்குற்றம்[1] நீக்காமை;
வீணாக ஊர் சுற்றுதல்; கோவில் வலம் வராமை;
செல்வர்க்குக் கைகூப்பி வாழ்த்தல்; இறைவன் சன்னிதியில் கை கூப்பாமை;
புன்னெறிசேர் மிண்டரொடு கூடுதல்;
தொண்டரொடு கூடாமை;
முகமலர்ச்சியின்மை;
இறைவன் சீர் நல்லோர் நவிலவும் கேளாமை;
பண்ணீர்மை கொண்ட தமிழ்ப் பாமாலையால் துதியாமை;
பொய்யடிமை வேடம் பூணுதல்;
மையல் விளைக்கும் மாதர்[2] புணர்ச்சியில் வீழ்தல்;
பின்னொன்றும் முன் ஒன்றுமாக மொழிதல்;
இரப்போர்க்குத் தானம் செய்வாரைத் தடுத்தல்;
வழக்கில் பொய்க்கரி கூறுதல்;
இறைவன் சந்நிதியில் மரம்போல் நிற்றல்;
சிவநிந்தை கேட்டல்;
புண்ணியரை வசைச் சொல் கூறுதல்;
சிவ பூசை செய்யாமை;
நல்லோரைப் போற்றாமை;

---

1. காமம் வெகுளி மயக்கம். 2. விலைமாதர்.

ஈயென இரப்போரைக் கண்டு நாய்போல் குரைத்தல்;
சிந்தையொன்று வாக்கொன்று செய்கை ஒன்றாய் இருத்தல்;
நல்லோர் சொல்லைக் கேளாமை;
புன்கல்வி கற்றல்;
பேராசை கொள்ளுதல்;
பாதகம் செய்தல்;
வாய்மை பேசாமை;
இனியவை கூறாமை;
சிவபுண்ணியம் செய்யாமை;
கோள் உரைத்தல்;
சிவாகம நூல் வாசியாமை;
வேடிக்கையில் நாட்டம்;
இறைவனது விழாவுக்குச் செல்லாமை;
மோகத்தில் உள்ளம் பூரித்தல்;
சிவயோகம் என்றால் உள் நடுங்குதல்;
சிவ சிவா என்று சொல் என்றால் துக்கம் வருதல்;
சோம்பல் உடைமை;
இரக்கம் இன்மை;
எப்பொழுதும் தூங்குதல்;
நீறு அணியாதவர் மனை ஆயினும் சோறு கிடைத்தால் சொர்க்கமாக எண்ணுதல்;
நல்லவர்களைத் தாழ்த்திப் பேசுதல்;
தொண்டரைத் துதியாமை;
எப்பொழுதும் சண்டை போடுதல்;
வஞ்சரொடு வாதாடுதல்;
நல்ல தருமங்களை நிந்தை செய்தல்;

அஞ்செழுத்தை ஓதும் அடியார்களை அடைந்தால் சங்கடப் படுதல்;
நல்ல சாந்த குணம் இன்மை;
நாணமின்மை,
ஈகின்றேன் என்று சொல்லளவிலாயினும் சொல் என்றாலும் சொல்லாமை;

இரப்பவர்க்கு இல்லையென்றே கூறுதல்;
அயலார் சிறு அணிகலன்களைப் பூண்டாலும் பொறாமை;
ஒரு வீசம் கொடுத்து எட்டு வீசம் கொடுத்தேன் என்று ஏமாற்றுதல்;

பொய்ந் நூல்களையே படித்தல்;
திருவைந்தெழுத்தை உச்சரியாமை;
தந்திரம், சூது இவற்றில் தேர்ச்சி;
ஆணவங் கொள்ளுதல்:
மூடனாகவும் பேதையாகவும் இருத்தல்.
—இவையே பற்பலவாய் ''உற்ற தவத்தோர் நீத்த தீதுகள்''.

இத்தீயவற்றைப் போக்கித் தம்மை இறைவன் ஆட்கொள்ள வேண்டும் என்பதே ஆசிரியர் வேண்டுகோளாகும்.

மேலே கூறியவற்றுள் ஏதேனும் ஒரு குறைகூட வள்ளலார் மாட்டுக் காணப்படுவது இன்று; மற்ற மன்பதைகள் மாட்டே பல்கி இருப்பன. இம்மன்பதைகள் இக்குற்றங்களினின்று நீங்கி நன்மை பெற வேண்டும் என்பதே ஆசிரியர் கருத்து ஆகும்.

**இறைவனின் அருட்செயல்கள்**

372 முதல் 390 ஆம் கண்ணிவரை சிவபெருமான் மன்பதைகள் உய்யும் பொருட்டுச் செய்த அருட் செயல்கள் கூறப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு :

மண்ணவர்க்கும் வானவர்க்கும் இரங்கி ஆலகாலம் என்னும் நஞ்சையுண்டமை;

திருக்கயிலை மலையையே பெயர்த்தெடுத்த இராவணனுக்கு நாளும் வாளும் வழங்கியமை;

முனிவர்கள் ஆபிசார யாகம் செய்து ஏவிய பாம்புகளை அணிகலனாகக் கொண்டமை;

தாயை யிழந்த பன்றிக்குட்டிகளுக்குத் தாயாக வந்து முலைப் பால் அருளியமை;

பாணன் பொருட்டு விறகு சுமந்தருளியமை;

வந்தியின் பொருட்டு வேலையாளாகி வந்து பிட்டுக்கு மண் சுமந்தருளியமை;

மாணிக்கவாசகர் பொருட்டுக் குதிரைச் சேவகனாக வந்தமை

விசயனிடத்தில் வில்லடியும், சாக்கிய நாயனார் எறிந்த கல்லடியும் ஏற்றமை;

வில்வக் கிளையுதிர்த்த மூசுக்கலையை முசுகுந்த மன்னவனாக ஆக்கியமை;

எலியொன்று திருமறைக்காட்டில் மூக்குச்சுட்டிடத் திரியை ஊக்கியமையின் அத்தொண்டு காரணமாக எலியை மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறப்பித்தமை;

சிலந்தியொன்று ஆனைக்காவில் கூடு கட்டிய புண்ணியப் பலனால் கோச்செங்கட் சோழனாகப் பிறப்பித்தமை;

வாகீசர் பசியுடன் திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்தை நோக்கிச் செல்லுங்கால் கட்டுச்சோறு கொணர்ந்து கொடுத்தமை;

சுந்தரர் பொருட்டுப் பரவையாரது ஊடலைத் தீர்க்கக் கருதித் திருவாரூரில் இருமுறை பரவையாரிடம் தூது நடந்தமை;

அடியார்கள் செய்த குற்றங்களையெல்லாம் குணமாகக் கொண்டமை;

—இத்தகைய அருட் செயல்கள் புரிந்துள்ளமையின் மன்பதைகளின் பிழைகள் அத்தனையும் பொறுத்து அன்னோரை ஆட்கொள்ள வேண்டும் என்பதே அடிகளாரது கருத்தாகக் கொள்க.

**வேண்டுகோள்** (கண்ணி 391—394)

கூற்றுவனுக்குக் காட்டிக்கொடுக்கற்க;
பிறவிக் கடலில் அழுத்தற்க;

நின் பொற்றாள் நினையாதார் மனையிற் சென்று உடலோம்புமாறு செய்யற்க;

என்னைத்தீய நெறியில் செலுத்தற்க;
—என்பவையே வள்ளலாரது வேண்டுகோளாகும்.

**கலங்கிய தம்நிலை கூறல்**

395 முதல் 412 ஆம் கண்ணி வரை வள்ளல் பெருமான் தம்முடைய நிலைமையை வகுத்தருளுகிறார்.

எனக்கு அடங்கியிரு என்று நெஞ்சை நோக்கி வேண்டுகிறேன்; எனினும் அது எனக்கு அடங்கவில்லை; இதனால் இளைக்கின்றேன்.

குரங்குகள் மரக்கொம்புகளில் ஏறித் தாவும்; அதுபோன்று என் மனமும் பொல்லாத உலகமாகிய காட்டில் திரிகிறது; இதனால் கலங்குகின்றேன்.

மாயை என் அறிவை மயக்குகிறது; இம்மாயை எனும் உட்பகையால் காமமாகிய கள்ளை உண்டு கவலையடைகிறேன்.

சிவபெருமானுடைய திருவடிகளை வணங்காத மக்களிடம் போய் மயங்குகின்றேன்.

சினம் கொள்கின்றேன்; துன்பம் அடைகிறேன்; கவலையாகிய கடலில் வீழ்ந்து ஆதரவு இல்லாமல் அலைகின்றேன்.

சிவனடியார்களைக் கண்டு பிறர் பிறுர் நாத்திகம் பேசுவர்; அவர்களைக் கண்டு நடுங்குகின்றேன்.

பாத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் இல்லறத்தார் கடமையாகும்: அங்ஙனம் செய்யாமல், உய்யும்வகை அறியாது திகைக்கின்றேன்.

சைவநெறி கருணைநெறி; அத்தகு கருணை எனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ என்று நினைத்து இளைக்கின்றேன்.

இயமன் என் உயிரைக் கொள்வதற்கு வரின் செய்வது அறியாது அஞ்சுகின்றேன்.

முன்செய்வினையால் வரும் நோய்களால் துன்புற்றுத் தாமரையின் நீர்போல் தயங்குகின்றேன்.

சிவபெருமான் அருள்செய்ய இன்னும் வரவில்லையே என்று உருகுகின்றேன்.

உலகவாழ்க்கை ஒரு பெரிய சிறை; இச்சிறையிலிருந்து என்னை மீட்பவர் இலாது விழிக்கின்றேன்.

இச்சிறையினின்று மீட்டல் என்ற ஆற்றில் ஒரு காலையும், சமுசாரம் என்னும் சேற்றில் ஒரு காலையும் வைத்து மயங்குகின்றேன்.

உலக வாழ்க்கையென்பது ஒரு பெரிய பாலைவனம்; பாலைவனத்தில் நீர்வேட்கை கொள்பவர் தவிக்குமாறு போல உலக வாழ்க்கையாகிய பாலையில் இறைவனது அருள் ஆகிய நீரை விரும்பித் தவிக்கின்றேன்.

பாம்பின் வாய்ப்பட்ட தேரையைப் போல் ஐம்பொறிகளின் வசப்பட்டு மிகவும் வாடுகின்றேன்.

வலையில் அகப்பட்ட மான்போல மாதர் விழியில் அகப்பட்டுச் சோர்ந்து கிடக்கின்றேன்.

உலக வாழ்க்கையாகிய பிரளயத்தில் தோன்றுகிற சுழிகளில் அகப்பட்டுச் சுழல்கின்றேன்.

—இங்ஙனம் தமது கலங்கிய மனநிலையை வள்ளற்பெருமான் விவரித்துள்ளார். (மன்பலைதகள் யாவருக்கும் இவையொக்கும் என்க).

**தொண்டருடன் [illegible]**

413 முதல் 417 வரையுள்ள கண்ணிகளில் தமது தகுதிகளைக் கூறிக், கம்மை விட்டுவிடுதல் வேண்டாம் என்றும், தொண்டருடன்

கூட்டுதல் வேண்டும் என்றும், **இறைவன்தாள் வாழ்க என்றும்** முடித்துக் கூறுகிறார் வள்ளற் பெருமான்.

இவ்வுலகில் நான் இறையன்பு இல்லாதவன் எனினும் **அன்பன்** என்று சொல்வதற்கு உரியவனாக இருக்கிறேன்.

உன் திருவடிகளை (ஓரோவழி) மறந்தாலும் **வெண்ணீற்று நெறியை விடேன்.**

யார் வந்து தடுத்தாலும் என்னைக் கைவிடேல்; நீ தயவு செய்க.

**நின் தொண்டருடன் சேர்த்தருள்க!**
**நின் தாள் மலர் வாழ்ந்திடுக!**

**தொண்டர்கள் பற்றி**

வள்ளலார் பல கண்ணிகளில் திருத்தொண்டர்களின் சிறப்புத் தன்மை முதலியவற்றை மிகுந்த பெருமையுடன் பேசியுள்ளார். அவையாவன :—

எட்டுத்திக்கிலும் உள்ள நன்மக்களுக்குத் தம்திருத் தொண்டால் நல்வாழ்வு அளிப்பவர் (28)

ஒன்றைவிட்டு ஒன்று பற்றுதலாகிய மயக்கமும் அறியாமையாகிய இருளும் போக்கியவர் (30)

உயர்ந்த அறிவு நல்கும் நூல்களை ஓதிச் சிவநெறியில் நிற்பவர் (60)

திருவைந்தெழுத்தை ஓதும் சிவநெறி கற்பிக்கும் பள்ளியில் பயின்றவர்கள் (81)

சோலைகளிலும் நீர்த்துறைகளிலும் சிவஞானம் பெறற் பொருட்டுச் சைவநூல் ஓதுபவர்கள் (83)

சிவன்பால் கருத்தை யிருத்தி ஏத்துபவர் (102)

காமம் வெகுளி மயக்கங்களாகிய குற்றங்களைப் போக்கிய அன்பர்கள் (103)

நன்னெறியில் நின்று அன்பு காட்டும் மெய்யுணர்வுடையோர் (107)

உடம்பை ஒரு பொருட்டாக எண்ணாமல் அதன் நிலையாமையை எண்ணுகின்றவர் (109)

நல்லோரால் இகழப்படும் தீ நெறிகளை இருமையினும் மேவாதவர் (117)

கருவிலேயே தீயவரைத் துணையாகச் சேர்தல் இல்லாதவர் (119)

அச்சம் பொருந்திய உடம்பின் சேர்க்கையை விட்டு நற்கதி சேர விரும்புவோர் (121)

இந்தப் பிறவியிலேயே கருவின் உருவாகி வருதலாகிய பிறப்புத் துன்பம் நீங்கவேண்டும் என்று இறைவனை வழிபடுபவர் (128)

மயக்கமும் பிற நோய்களும் நீங்குவதற்குத் தென்மதுரச் சொன்மாலை பாடுபவர் (133)

மேன்மை தரும் முற்றேமம் வாய்ந்த முனிவர் (இவர் பிறர்க்குத் தீங்கு செய்யார்) (170)

கற்றவர்களோடு எங்கும் உசாவுவர் (171)

பூதம் முதலிய தத்துவக் கூறுகளில் பொதிந்துள்ள நிலையாமை கண்டு மெய்ப் பொருளுண்மை அறிபவர் (177)

மண் பெண் பொன் முதலிய ஆசைகளின் வன்மையைக் கெடுக்கும் மெய்யன்பர்கள் (184)

மனத்தில் எழுகின்ற சினத்தை விட்டோர் (185)

மனத்தையடக்கி, நற்பண்புகள் நிறைந்தோர் (208)

வஞ்சம் புரியும் தீய நினைவுகட்கு மனத்தில் இடங் கொடாதவர் (211)

சிவநெறி நின்று அருட்சக்தியை வேண்டித் தம் கருத்தை முற்றுவித்த மேன்மை பெறும்மாதவர் (213)

கருவிலே உட்படுத்தும் கொடிய வினைத் தொடர்புகளை நீக்கியவர் (214)

அழகிய சொற்களால் இறைவனைப் புகழ்ந்துபாடுபவர் (225)

முக்குணவசத்தால் நெறி பிறழாது நின்று சிவநெறிக்கண் செல்லும் அன்பர் (227)

மேன்மை பொருந்திய சிவ நெறிக்கண் ஆர்வம் பொருந்தியவர் (241)

பற்றப்பட்ட பொருளில் இரண்டறத் தோய்ந்த மனத்தால் போகம் பயிலும் தவத்தோர் (243)

மண்ணுலக வாழ்வில் அச்சந் தருவனவற்றை முன்னறிந்து போக்கும் மதியுடையோர் (252)

ஊற்றுப் போல் மெய்யன்பு சுரக்கும் தொண்டர் (259)

நிகர்பிறர் இல்லை எனப்படும் திருத்தொண்டர் (266)

சமய நூல்களைப் படி முறையால் கற்றவர் (270)

பக்தியுள்ளோர் (271)

அருள் நிறைந்த சான்றோர் (276)

குற்றமின்மையாகிய நல்லொழுக்கம் உடைய திருத்தொண்டர் தம் உள்ளம் குளிர இறைவன் நல்லருள் செய்வன் (134)

மெய்ந் நூல்களை ஓதும் திருத்தொண்டரிடத்து அன்பு செய்து ஆதரிக்கும் பரை (194)

நல்லொழுக்கம் உடைய இவரைக் கருணையுடன் ஊறு சிறிதும் இன்றி இறைவன் காத்தருள்வன் (195)

இம் மவுனிகளின் உள்ளத்தில் பூவின் வண்ணமும் மணமும் போல இறைவன் அமர்ந்திருப்பன் (202)

**பொது**

"பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோல்" என்ற பழமொழி 410ஆம் கண்ணியில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

413 ஆம் கண்ணியில், "அன்பன் என ஒப்பாரியேனும் உடையேன்" என்ற விடத்து "ஒப்பாரி" என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது." "ஒப்பாரி" என்பது "ஒப்பு" என்னும் பொருளது. "அவரன்ன ஒப்பாரி யாங்கண்டதில்" என்பது குறள் (1071).

**முடிப்புரை**

"'தொண்டரொடு கூட்டுக" என்பதே இக்கலி வெண்பாவின் முடிந்த முடிபாகிய விண்ணப்பம் என்பதும், "வெண்ணீற்று நெறி கடைப்பிடித்தொழுகுதலே நம் கடமை" என்பதும், "நாதன் தாள் வாழ்க" என்று வாழ்த்துதலே பிறவிப்பயன் என்று அறிந்து உய்வது சிவநெறிச் செல்வார் ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும் என்பதும் இக்கலி வெண்பாவான் அறியப்பெறும்.

"நீ தயவு
சூழ்ந்திடுக! என்னையும்நின் தொண்டருடன் சேர்த்தருள்க;
வாழ்ந்திடுக நின்தாள் மலர்" (கண்ணி 417)

# திருவருட்பா ஓதுதலின் பயன்

பத்திவரும்; பழவினைகள் பறந்தோடும்;
மூலமலப் பகுதி மாயும்;
புத்திவரும்; புலைகொலைகள் புறம்போகும்;
ஆனந்தம் பொங்கும்; சாந்த
முத்திவரும்; அழியாநன் மோக்கமுறும்;
முதுகடல்சூழ் உலகில் எல்லாச்
சித்திவரும்; இராமலிங்க வள்ளால்! நின்
அருட்பாவைச் சிந்திப் போர்க்கே.

கல்வி நலம்செல்வம் காருண்யம் அன்பொழுக்கம்
புல்லறு மெய்ஞ் ஞானானு பூதியிவை - எல்லவர்க்கும்
தெள்ளுதமிழ்க் கோமான் சிதம்பரம் ராமலிங்க
வள்ளலருட் பாவால் வரும்.